DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No.46/2021

Prosecution side witness for P.W.22

| | | | |
|---|---|---|---|
| Name | ... டாக்டர். திருமதி. ஜெயலெட்சுமி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.08.2025.**

A1 to A4 are present.

முதல்விசாரணை:–

நான் கடந்த 17 வருடங்களாக தூத்துக்குடி அரசுமருத்துவகல்லூாி மருத்துவமனையில் நுண்கதிர்பிரிவில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 23.09.2013 அன்று மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த செம்புலிங்கம் மகள் மணிமேகலை வயது 18 என்பவருக்கு இடது கை முட்டியிலும், வலது கையிலும் ஏற்பட்ட காயத்திற்காக எக்ஸ்ரே படங்கள் 2 எடுக்கப்பட்டன. படங்களை ஆய்வு செய்ததில் அவருக்கு ஏற்பட்ட காயங்கள் Chip fracture upper end of ulna என்று சான்று வழங்கியுள்ளேன். அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கருத்துரை வழங்கினேன். அதற்காக நான் வழங்கிய நுண்கதிர் குறிப்பு என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது அ.சா.ஆ–19 ஆகும். ஒன்றுக்குமேற்பட்ட நபர்கள் ஆயுதத்தால் காயம்பட்ட நபரை தாக்கும்போது ஏற்பட வாய்ப்புண்டு. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாாித்தார்.

குறுக்குவிசாரணை (அனைத்து எதிரிகள்தரப்பில்)

வேகமாக கீழே விழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் வாய்ப்பு மிக குறைவாகும். வெளிக்காயங்கள் என்னவென்றால் அது பற்றி எனக்குதெரியாது. நான் நுண்கதிர் படம் எடுத்து ஆய்வு செய்து அ.சா.ஆ–19 வழங்கினேன். என்னை ஆய்வாளர் விசாாிக்கும்போது ஆயுதங்களை காட்டி விசாாிக்கவில்லை என்றால் சாிதான்.

மறுவிசாரணை (அனுமதியுடன்)

அ.சா.பொ. 6, 7,8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அாிவாள், மற்றும் கம்பு போன்றவைகளால் தாக்கும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது

என்றால் அரிவாளின் கூர்மையான பகுதியால் தாக்கும்போது  மேற்சொன்ன Chip fracture ஏற்பட வாய்ப்புண்டு

<u>மறுகுறுக்குவிசாரணை (அனுமதியுடன்)</u>

அரிவாளின் கூர்மையான பகுதியால் தாக்கும்போது வெளிப்பகுதியில் incised or cut injury ஏற்படும் என்று சொன்னால் சரிதான்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No.46/2021

Prosecution side witness for P.W.23

| | | | |
|---|---|---|---|
| Name | ... டாக்டர். திருமதி. ஸ்ரீலதா | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.08.2025.**

A1 to A4 are present.

<u>முதல்விசாரணை:-</u>

நான் தற்போது மதுரை தோப்பூர் நெஞ்சக நோய் மருத்துவமனையில் நிலைய மருத்துவ அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 2013 ஆம் வருடம் தூத்துக்குடி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக அவசர சிகிச்சை பிரிவில் பணிபுரிந்தபோது, 19.09.2013 அன்று இரவு 12.40 மணிக்கு ராஜலிங்கம் என்பவரை உறவினர் துரைச்சாமி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். 18.09.2013 அன்று இரவு 11.30 மணிக்கு அடையாளம் தெரிந்த 7 நபர்கள் அவருடைய வீட்டில் வைத்து அரிவாளால் தாக்கியதாகவும், அவரை பரிசோதனை செய்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

காயம் எண்.1 – இடது மணிக்கட்டிலிருந்து உள்ளங்கை வரை கிழிந்த காயம் 9x 5 x 3 செ.மீ அளவில் கிழிந்த காயம் இருந்தது.

காயம் எண். 2 – வலது முழங்கை முதல் முன்கைவரை 8 x 5 x4 செ.மீ அளவில் கிழிந்த காயம் இருந்தது.

காயம் எண். 3 – வலது நெற்றிலிருந்து வலது காது வரை 7x 3 x 2 செமீ அளவுள்ள வெட்டுக்காயம் இருந்தது.

காயம் எண். 4 – இடது பெருவிரல் 3 x 2 x 1 செ.மீ அளவில் வெட்டுக்காயம் இருந்தது.

காயம் எண். 5 – வலது தோள்பட்டையில் 10 x 3 x 2 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் இருந்தது.

அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். அவர் மருத்துவர் அனுமதியின்றி வெளியே சென்றுவிட்டதால் கருத்துரை வழங்க இயலவில்லை.

அன்றையதினமே காலை 12.50 மணிக்கு சிவசக்தி என்பவரை அவரது உறவினர் துரைச்சாமி அழைத்து வந்தார். 18.09.2013 இரவு 11.30 மணிக்கு அடையாளம் தெரிந்த 2 நபர்கள் இரும்புகம்பி, அரிவாளால் அவரது வீட்டில் வைத்து தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்தபோது சுயநினைவுடன்தான் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

காயம் எண். 1 – வலது மேல்கையில் 4 x 2 x 2 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 2 – தலையின் நடுவில் 3x 2 x 1 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 3 – வலது தலையில் 4x 2 x1 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 4 – இடது உள்ளங்கையில் 5x 3 x2 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 5 – கழுத்தின் முன்பகுதியில் 2x 1 x 1 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 6– நாடியில் 3 x 2 x2 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 7– வலது கன்னத்தில் 2 x 1 x1 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது.

அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்தேன். அவர் மருத்துவர் அனுமதியின்றி வெளியே சென்றுவிட்டதால் கருத்துரை வழங்க இயலவில்லை.

அன்றையதினம் காலை 2.00 மணிக்கு மணிமேகலை என்பவரை அவரது உறவினர் துரைச்சாமி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். 18.09.2013 அன்று இரவு 11.30 மணிக்கு அடையாளம் தெரிந்த 4 நபர் அவரை அவரது வீட்டில் வைத்து அரிவாள், மற்றும் கம்பால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது கீழ்கண்ட காயங்கள் இருந்தது.

காயம் எண்.1 –இடது முழங்கையில் 2 x 1 x 1 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 2 – வலது உள்ளங்கையில் 3 x 1 x1 செ.மீ அளவுள்ள வெட்டுக்காயம் காணப்பட்டது.

காயம் எண். 3 – இடது கண்ணை சுற்றி இரத்தக்கட்டு காணப்பட்டது.

அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். இடது முன்னங்கையில் உள்ள நுண்கதிர் பரிசோதனையில் நுண்கதிர் மருத்துவரின் கருத்தின்படி அவருக்கு எலும்பு முறிவு காணப்பட்டது. பெறப்பட்ட ஆவணங்களின்படி காயம் 1 கொடுங்காயம் என்றும், காயம் எண் 2, 3 சாதாரண காயம் என்றும் சான்று வழங்கினேன். மணிமேகலை என்பவருக்கு நான் வழங்கிய காயச்சான்று நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–20** ஆகும். ராஜலிங்கம் என்பவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–21** ஆகும். சிவசக்தி என்பவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–22** ஆகும். அதற்காக நான் மருத்துவமனை புறக்காவல் காவல்நிலையத்திற்கு அனுப்பிய காயத்தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–23** ஆகும்.

அன்றையதினமே காலை 3.50 மணிக்கு செம்புலிங்கம் த/பெ. மகாலிங்கம் என்பவரை அவரது உறவினர் முருகதுரை என்பவர் அழைத்து வந்தார். அவரை நான் பரிசோதித்தபோது ஏற்கனவே இறந்திருந்தார். அதனால் அவர் பிரேத உடலை பிணவறைக்கு அனுப்பிவைக்க குறிப்பு வழங்கினேன். அது சம்மந்தமாக நான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–24** ஆகும். அதற்காக நான் மருத்துவமனை புறக்காவல் காவல்நிலையத்திற்கு அனுப்பிய இறப்புதகவல் அறிக்கை நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–25** ஆகும். மேற்படி காயங்கள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 6, 7, 8 மற்றும் 4 ஆன அரிவாள் மற்றும் கம்பு ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புண்டு. இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (அனைத்து எதிரிகள்தரப்பில்)</u>

ஆய்வாளர் என்னை விசாரிக்கும்போது ஆயுதங்கள் எதையும் காண்பித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக கூர்மையான ஆயுதங்கள் வெட்டுக்காயங்களை விளைவிக்கும் என்றால் சரிதான். மழுங்கலான ஆயுதங்கள் வீக்கம் போன்ற காயங்களை ஏற்படுத்தும் என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No.46/2021

Prosecution side witness for P.W.24

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு.அப்துல்லா | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.08.2025.**

A1 to A4 are present.

முதல்விசாரணை:–

நான் தற்போது தூத்துக்குடி முத்தையாபுரத்தில் உள்ள தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மான கழகத்தில் உதவி செயற்பொறியாளராக பணியாற்றி வருகிறேன். 2013 ஆம் ஆண்டு இதே தமிழ்நாடு மின்உற்பத்தி பகிர்மான கழகத்தில் உதவி மின்பொறியாளராக பணியாற்றி வந்தேன். 18.09.2013 ஆம் ஆண்டு அத்திமரப்பட்டி வேதக்கோவில் அருகில் இரவு 11.30 மணியளவில் மின்சாரம் இருந்ததா, இல்லையா என்று விவரம்கேட்டு முத்தையாபுரம் காவல்நிலைய ஆய்வாளர் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் மேற்படி பகுதியில் 18.09.2013 ஆம் தேதி இரவு 11.30 மணியளவில் மின்சாரம் இருந்தது என்ற அறிக்கையை மேற்படி காவல் ஆய்வாளருக்கு ஆய்வு செய்து கொடுத்தேன். அது சம்மந்தமான அறிக்கை நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 26** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (அனைத்து எதிரிகள்தரப்பில்)

முத்தையாபுரம் உபகோட்டத்தில் எத்தனை டிரன்ஸ்பார்ம் உள்ளது என்றால் நான் பணிபுரிந்த காலகட்டத்தில் மொத்தம் 75 டிரன்ஸ்பார்ம்கள் இருந்தது. கணக்கில் அடங்கா மின்கம்பங்கள் இருந்தன என்றால் சரிதான். அந்த மின்கம்பங்களை சுவிட்ச் ஆப் செய்வது, சுவிட்ச் ஆன் செய்வது எல்லாம் பஞ்சாயத்து பணியாளர் என்றால் சரிதான். பஞ்சாயத்து பணியாளர்களிடம் கேட்டால்தான் எந்த மின்கம்பத்தில் எந்த தெருவில் லைட் எரிந்தது, எரியவில்லை என்று தெரியவரும் என்றால் சரிதான். சில மின்கம்பங்களில் பல்ப் இருந்ததா இல்லையா என்பதையும் அவர்கள்தான் சொல்லமுடியும் என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.